# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 170/ந/2017

ஆணை எண். 77/2018

நாள் : 28/03/2018

**திரு இரா. கந்தன்,**
**ஆவடி 600 071.** – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
ஆவடி நகராட்சி,
**ஆவடி, சென்னை – 600 054.** – எதிர் மனுதாரர்

சென்னை, ஆவடி, காமராஜ் நகர், 5–வது தெரு, 39 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு இரா. கந்தன் அவர்களின் 21.08.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 21.08.2017 அன்று பெறப்பட்டு, 170/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, ஆவடி, காமராஜ் நகர், 5–வது தெரு, 39 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு இரா. கந்தன் என்பவர் தான் இரண்டு தலைமுறைகளாக மேற்குறிப்பிட்ட முகவரியில் வசித்து வருவதாகவும், கடந்த 14.07.2004 அன்று ஆவடி நகராட்சியில் கட்டட திட்ட அனுமதி பெற்று வீடு கட்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், மீதமுள்ள காலி வீட்டுமனையில் வீடு கட்ட கோரும் கட்டட திட்ட அனுமதி மனுவினை ஆவடி நகராட்சியில் பெற மறுப்பதற்கு, சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை வழக்கு எண். 25184/2015–இல் வழங்கிய தீர்ப்பினை செயல்படுத்தத் தவறிய ஆவடி நகராட்சி ஆணையர் மீது 2658/2015 எண்ணிட்ட அவமதிப்பு வழக்கினை தாக்கல் செய்ததுதான் இதற்குக் காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, தனது முறையீட்டு மனுவின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு ஆணை வழங்கக்கோரி முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 07.11.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது கட்டட அனுமதி வேண்டி நகராட்சிக்கு சென்றபோது தான் அலைக்கழிக்கப்பட்ட விவரங்களைத் தெரிவித்தார். மேலும், வீடு கட்ட அனுமதி கோரும் மனுவை நகராட்சியில் பெற மறுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் ஆவடி நகராட்சி அலுவலர்கள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்தும் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொண்டார்.

3. ஆவடி நகராட்சி ஆணையர், முன்னாள் நகரமைப்பு அலுவலர் திரு எஸ்.வி. மாறன் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் பெ. நிர்மலாதேவி ஆகியோரிடம் 05.03.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. விசாரணையின்போது நகராட்சி அலுவலர்களால் சில ஆவணங்கள் மற்றும் 27.09.2016 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.411 (பத்தாண்டு) நகல் தாக்கல் செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் கீழ்க்காணும் நிகழ்வுகள் கண்டறியப்பட்டுள்ளன.

4. முறையீட்டு மனுதாரர், தான் குடியிருக்கும் கதவு எண்.39, காமராஜ் நகர், 5–வது தெருவில் உள்ள மனையின் ஒரு பகுதியை 1989–ஆம் ஆண்டு திரு குணசேகரன் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார். மேற்படி, மனை நிலத்தை வாங்கிய திரு எஸ். குணசேகரன் நகராட்சி அனுமதி பெறாமல்1989–ஆம் ஆண்டு 280 சதுர அடி பரப்பளவில் கட்டடம் கட்டியுள்ளார். அம்மனையில், கூடுதலாக 1064 சதுர அடி பரப்பில் கட்டடம் கட்டுவதை ஆட்சேபித்து மனுதாரர் நகராட்சியிடம் புகார் செய்துள்ளார். இந்நிலையில், நகராட்சி அனுமதி பெறாமல் கட்டட விதிகளுக்கு முரணாக திரு எஸ். குணசேகரன் கட்டடம் கட்டியதை ஆட்சேபித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் 25184/2015 எண்ணிட்ட நீதிப்பேராணையையும் மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட நீதிப்பேராணையில் வழங்கிய தீர்ப்பினைத் தொடர்ந்து திரு எஸ். குணசேகரன் அவர்கள் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை முறைபடுத்தக்கோரி 20.08.2015 அன்று நகராட்சிக்கு விண்ணப்பித்துள்ளார். அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளார். திரு எஸ். குணசேகரன் அவர்களது கோரிக்கையை பரிசீலனை செய்த அரசு செயலர் அவர்கள், மனுதாரர் கட்டடம் கட்டியுள்ள நிலம் "மேய்க்கால் புறம்போக்கு" என வருவாய்த் துறையின் ஆவணங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், நகராட்சி அனுமதி பெறாமலும் மற்றும் கட்டட விதிகளுக்கு முரணாக கட்டடம் கட்டியுள்ளதாகவும் திரு S. குணசேகரன் என்பவரின் மேல்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டு 27.04.2016 நாளிட்ட அரசு ஆணை எண். 411–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை வழக்கு எண்.25184/2015–இல் நீதிமன்றம் வழங்கிய 23.09.2015 நாளிட்ட தீர்ப்பு மற்றும் அத்தீர்ப்பினைத் தொடர்ந்து திரு S.குணசேகரன் அவர்கள் அரசுக்குத் தாக்கல் செய்த மேல்முறையீட்டில் நிலம் குறித்து அரசு கண்டறிந்த உண்மை ஆகியவற்றை பரிசீலனை செய்த நகராட்சி ஆணையர், முறையீட்டு மனுதாரர் திரு கந்தன் என்பவர் அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டியுள்ளதாகவும் திரு S. குணசேகரன் என்பவர் அனுமதியின்றி கட்டடம் கட்டியுள்ளதையும் கண்டறிந்துள்ளார். எனவே, சம்பந்தப்பட்ட முறையீட்டு மனுதாரர் திரு இரா. கந்தன் மற்றும் திரு S. குணசேகரன் ஆகிய இருவரும் விதிகளுக்கு முரணாக கட்டப்பட்டுள்ள தங்களது கட்டடங்களை அவர்களாலேயே இடித்து அப்புறப்படுத்தக் கோரி 07.12.2016 நாளிட்ட கடித எண்.1040/எப்–1/2015–இல் இறுதி அறிவிப்பு நகராட்சி ஆணையரால் வெளியிடப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு, அதனைத் தொடர்ந்து அரசு வெளியிட்ட ஆணை மற்றும் நகராட்சி ஆணையரின் 07.12.2016 நாளிட்ட அறிவிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்தும் இந்நேர்வுக்குட்பட்ட அனுமதிக்கு மாறாக மற்றும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடப் பகுதிகள் அகற்றப்படாமலேயே உள்ளன. இம்முறையற்ற கட்டிடங்கள் குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றமும் கீழ்க்காணும் தீர்ப்பினை வழங்கியுள்ளது :-

> "If it is found that there is any deviation or unauthorized constructions by either parties, the fourth respondent (the Commissioner, Avadi Municipality) shall take necessary action for removal or such illegal constructions……. "

இந்நேர்வில் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளால், 30 தினங்கள் முடிவடைந்த நிலையிலும் மேற்குறிப்பிட்ட நபர்களின் முறையற்ற கட்டடப் பகுதிகள் அகற்றப்படாமலேயே உள்ளன. எனவே, இனியும் காலம் தாழ்த்தாமல், 05.03.2018 அன்று விசாரணையின்போது நகராட்சி ஆணையர் உறுதி அளித்தபடி திரு இரா. கந்தன் என்பவரால் அனுமதிக்கு மாறாக கட்டிய கட்டடப் பகுதியையும், திரு குணசேகர் என்பவரால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடப் பகுதியையும் அகற்ற நடவடிக்கை மேற்கொண்டு இறுதியான அறிக்கையினை சமர்ப்பிக்கும்படி ஆவடி நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   ஆவடி நகராட்சி,
   ஆவடி.

2. திரு ஆர். கந்தன்,
   எண்.39, 5வது தெரு,
   காமராஜ் நகர்,
   ஆவடி நகராட்சி,
   ஆவடி – 6000 071.

3. திரு S. குணசேகரன்,
   கதவு எண்.37, 5–வது தெரு,
   காமராஜ் நகர்,
   ஆவடி, சென்னை – 600 071.

4. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   தாம்பரம், சென்னை.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்